21.03.2024

O.S.No.29/2014

வா.சா.3 .திரு.பக்ருதின் த.பெ.அரப்ஷா ராவுத்தர்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. அரப்ஷா ராவுத்தர், சுலைகாபீவி ஆகியோர்களுக்கிடையே பிறந்தவர்கள் 2 பெண் குழந்தைகள் உள்பட 7 மக்கள் என்றால் சரிதான். 1986 ம் ஆண்டு ஏற்படுத்திக் கொண்ட பாகபிரிவினை ஆவணத்தில் அரபுஷா ராவுத்தரின் மக்களான 7 பேரும் ஒன்றாக கூடி பாகம் ஏற்படுத்திக் கொண்டதாக சொல்லி உள்ளோமா என்றால் சொல்லி உள்ளோம். நாங்கள் அப்போது சிறு வயது உடையவர்களாக இருந்ததால் எனது தகப்பனார் மற்றும் தாயார் சேர்ந்து முடிவு எடுத்து மேற்படி ஆவணம் தயார் செய்து நாங்கள் அனைவரும் கையெழுத்திட்டுள்ளோம். வா.சா.ஆ-3 பாகபிரிவினை ஆவணத்தில் அப்துல் சமது, பக்ருதின், கமருதின், தாசில்தின் ஆகிய நால்வர் மட்டும் சேர்ந்து கையொப்பம் இட்டு ஏற்படுத்திக்கொண்டதாக இந்த போலியான ஆவணத்தினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நாங்கள் அனைவரும் கையொப்பம் இட்டுள்ளோம். அதே போல் மேற்படி ஆவணத்தில் அரபுஷா ராவுத்தர் குமாரர்கள் அப்துல் சமது, பகருதின், கமருதின், ஆகியோர்கள் 1 வது பார்ட்டியாகவும் மேற்படி அரபுஷா ராவுத்தர் குமாரர்களில் ஒருவருமான தாசில்தின் என்பவர் 2 வது பார்ட்டியாகவும் இருந்து, மேற்படி வா.சா.ஆ-3 ஆவணம் ஏற்படுத்திக்கொண்டதாக உள்ளது என்றால் சரிதான், நாங்கள் அனைவரும் அந்த நேரத்தில் சிறு வயதினராக இருந்ததால் அவர்களுக்கு மட்டும் சொத்தினை பிரித்து கொடுத்தார்கள்.

2. அதே போல் வா.சா.ஆ-3 ஆவணத்தில் 20.09.1978 ல் அப்பாஸ் என்பவருக்கு பொதுக் குடும்ப சொத்தில் இருந்து சில சொத்துக்களை மட்டும் பாகம் செய்து கொடுத்துள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். 20.09.1978 தேதியில் எங்களுக்கிடைய பாகபிரிவினை பத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி அப்பாஸ் என்பவர் தனக்கு 20.09.1978 தேதியில் பொதுக்குடும்ப சொத்தில் இருந்து இந்த சொத்துக்களை ஒதுக்கி கொடுத்தபோது மற்ற சொத்துக்களில் இருந்து தனக்கு பாகம் வேண்டாம் என அவர் எழுத்துபூர்வமாக எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, அப்பாஸ் பத்திரத்திலேயே அந்த சொத்தினை தவிர வேறு சொத்துக்கள் கேட்க அருகதை இல்லை என கண்டுள்ளது. அரபுஷா ராவுத்தருக்கு 7 நபர்கள் மக்கள் இருப்பதால் 3 நபர்கள் தான் அவரது மக்கள் என காண்பித்து அவருக்கு நாங்கள் வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளோம் என்றால் அவ்வாறு நாங்கள் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வாரிசு சான்றிதழ் நான் மனு செய்து பெறப்பட்டது என்றால் சரியல்ல.

3. எனது தாயார் 05.05.2015 அன்று இறந்துபோனார் என்றால் சரியல்ல, சுமார் 2007 ம் ஆண்டு வாக்கில் இறந்துபோனார். எனது தாயார் இறப்பு வரைக்கும் தாவாசொத்தினை குறித்து நானோ, எனது குடும்பத்தாரோ எந்த பிரச்சினையிலும் ஈடுபடவில்லை என்றால் சரிதான், தாவா சொத்து எங்களது அனுபவத்தில் தான் இருந்து வருவதால் நாங்கள் பிரச்சினையில் ஈடுபட வேண்டியதில்லை. தாவாசொத்து கருப்பையா என்பவர் சீனிராவுத்தரிடம் பண்ணை பணியாளராக வேலை பார்த்ததன்

அடிப்படையில் அவருக்கு கிடைத்த சொத்து என்றால் சரியல்ல, தாவாசொத்து எனது சிறுவயதிலிருந்தே எங்கள் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. எனக்கு தற்போது வயது 64 ஆகிறது. சீனிராவுத்தருக்கு எனது தாயார் சுலைகாபீவி மட்டும் தான் ஒரே மகள் என்றால் எனது தாயார் உடன் பிறந்த சகோதரி ஒருவர் எனது சிறுவயதிலேயே இறந்துவிட்டதாக சொல்வார்கள், எனக்கு தெரியாது. சீனிராவுத்தர் என்பவரிடம் இருந்து சுலைகாபீவிக்கு வாரிசு அடிப்படையில் கிடைத்த சொத்துதான் தாவா சொத்து என்றால் சரிதான். சீனிராவுத்தர் தன்னிடம் பண்ணை பணியாளராக வேலை பார்த்த கருப்பையாவுக்கு தாவா சொத்தினை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ-3 ஆவணம் தாவா சொத்தினை கைப்பற்றும் நோக்கில் எங்களால் போலியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-3 ஆவணத்தில் கண்டுள்ள முத்திரைதாள் அதில் கண்டுள்ள தரப்பினர்கள் யார் பெயரிலும் வாங்கப்படவில்லை என்றால் சரிதான், அரபுஷா ராவுத்தர் பெயரில் வாங்கப்பட்டது. வா.சா.ஆ-3 பாகபிரிவினை பத்திரம் 05.09.1986 அன்று எழுதப்பட்டதாவும், அந்த பத்திரத்தின் முத்திரைதாள் 03.12.1986 ல் வாங்கப்பட்டதாவும் காணப்படுகிறது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ-3 ஆவணத்தினை அடிப்படையாகக்கொண்டு 1988 வருடத்தின் ஒரு குடும்ப ஏற்பாட்டு ஆவணம் ஒன்றை நாங்கள் ஏற்படுத்திக் கொண்டதாக சொல்லி உள்ளோம் என்றால் சரிதான். மேற்படி 1988 ம் வருடத்தின் குடும்ப ஏற்பாட்டு ஆவணத்தினை அடிப்படையாகக்கொண்டு வா.சா.ஆ-2 கிரைய ஆவணம் எனது மனைவியான ரசிதாபேகத்திற்கு 28.06.2010 ல் எழுதிக்கொடுக்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ-2 ஆவணமும் மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல.

5. அதே போல் வா.சா.ஆ-2 ஆவணத்தினை அடிப்படையாகக்கொண்டு வா.சா.ஆ-1 ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 2010 ம் ஆண்டு வரை தாவாசொத்திற்கு எங்களது பெயரில் இருந்ததற்கான பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ-1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தினை பொறுத்து ஏதேனும் வில்லங்கம் ஏற்பட்டால் எங்களது சொந்த செலவில் அதை தீர்த்து வைப்பதாக எந்த சங்கதியும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஏன் அவ்வாறு சொல்லப்படவில்லை என்றால் தாவா சொத்து எங்களது சொத்து என்பதால் வில்லங்கம் எதுவும் இல்லை என்பதால் அவ்வாறு சொல்லப்படவில்லை. எனது தாயார் உயிருடன் இ ருந்த வரையில் தாவா சொத்து கருப்பையாவிற்கு கொடுத்துவிட்டதால் அவர் எந்தவித வில்லங்கமும் செய்யவில்லை என்றாலும், அவர் இறந்த பின்பு தாவா சொத்தில் நாங்கள் வில்லங்கம் செய்து வருகிறோம் என்றாலும் சரியல்ல. (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)